## இஸ்லாமியக் கலாச்சாரத்தில் குழந்தைகளின் பராமரிப்பு

மக்கட்பேறு அல்லாஹ்வின் ஒரு அருட்கொடையாகும், அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது கட்டாயமானதாகும். இந்த அருட்கொடைக்காக நன்றி செலுத்துவது எப்போது நிறைவேறும் என்றால், ஒருவர் தம்முடைய மக்களை இஸ்லாத்தின் சீரான கொள்கைகள். உயர்ப் பண்புகள், நற்குணங்கள் மற்றும் உயர்வான மரபுகளின் அடிப்படையில் வளர்த்துப் பராமரிக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَا مِنْ مَوْلُودٍ إِلَّا يُولَدُ عَلَى الفِطْرَةِ، فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ أَوْ يُنَصِّرَانِهِ أَوْ يُمَجِّسَانِهِ

*பொருள்: ஒவ்வொரு குழந்தையும் தனக்கே உரிய இயல்புகளின்மீது பிறக்கின்றது, ஆனால், அக்குழந்தையின் பெற்றோர் அதனை யூதானாகவோ, கிறித்துவனாகவோ அல்லது நெருப்பை வணங்கும் மஜூசியாகவோ ஆக்கிவிடுகின்றனர்* (புக்ஹாரி, முஸ்லிம்)

### தந்தையின் மீது குழந்தைகளின் உரிமைகள்

இஸ்லாம் குழந்தை வளர்ப்புக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளது. குழந்தைகளுக்கென்றே சில உரிமைகள் உள்ளன, பெற்றோர்களுக்கும் சில உரிமைகள் உள்ளன. குழந்தைகளின் உரிமைகளாவன:

1 **ஸாலிஹான தாயைத் தேர்ந்தெடுத்தல்** ஒரு தந்தையின் பொறுப்பு என்னவெனில் அவர் தன்னுடைய குழந்தைகள் சீரான முறையில் பராமரிக்கப்படுவதற்காக நேர்மையான, ஸாலிஹான தாயைத் தேர்ந்தெடுக்வேண்டும். இதன் காரணமாக, குழந்தைகள் இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவர்களாகவும் வளர்க்கப்படுவார்கள்.

2 **குழந்தைகளைத் தீமையானவற்றிலிருந்து பாதுகாத்தல்** இதற்கான வழி என்னவென்றால், நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளவாறு, குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் வலது காதில் பாங்கும் இடது காதில் இஃகாமத்தும் சொல்லவேண்டும். நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

رَأَيْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَذَّنَ فِي أُذُنِ الحَسَنِ بْنِ عَلِيٍّ حِينَ وَلَدَتْهُ فَاطِمَةُ بِالصَّلَاةِ (الترمذي، أبوداؤد)

ஹஜ்ரத் அபூ ராஃபிஉ (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

www.tazkiyah.com

*பொருள்: ஹஜ்ரத் ஹசன் பின் அலி (ர) அவர்களை ஹஜ்ரத் ஃபாதிமா (ர) பெற்றெடுத்தபோது நான் இறைத்தூதர் ﷺ அவர்களை அவருடைய காதில் தொழுகைக்கான பாங்கு போன்று அதானை சொல்லக் கேட்டேன்.*

இதனைத்தவிர, ஒரு தந்தையின்மீது மார்க்க ரீதியாகவும் உலக ரீதியாகவும் கேடு ஏதும் நிகழ்ந்திடாவண்ணம் தம்முடைய குழந்தைகளைப் பாதுகாப்பாக வளர்க்கும் பொறுப்பும் உள்ளது.

3 **குழந்தைகளுக்கு சிறந்த பெயர்களை வைக்கவேண்டும்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِنَّ مِنْ أَحْسَنِ أَسْمَائِكُمْ عَبْدَ اللهِ، وَعَبْدَ الرَّحْمَنِ**

*பொருள்: பெயர்களிலெல்லாம் சிறந்தவை அப்துல்லாஹ் மற்றும் அப்துர் ரஹ்மான என்ற பெயர்களாகும். (அஹ்மத்).*

இஸ்லாம் தீய மற்றும் முறையற்ற பெயர்களை வைப்பதிலிருந்து தடுக்கின்றது, ஏனெனில், மனிதன் கெட்டப் பெயர்களினால் வேதனையடைகின்றான். அவ்வாறே, நல்ல பெயர்கள் வைக்கப்படுமானால் மிகவும் மகிழச்சியடைகின்றான். ஏனெனில், இவ்வாறு செய்வதில் நபிமார்கள் மற்றும் ஸாலிஹான நல்லோர்களைப் பின்பற்றும் பண்பு காணப்படுகின்றது.

4 **இஸ்லாம் குழந்தை பிறந்த ஏழாவது நாள் அஃகீஃகா செய்வது கட்டாயமானதாக ஆக்கியுள்ளது** வசதியுள்ளவர்கள் குழந்தை பிறந்த ஏழாவதுநாள் ஆண் குழந்தைக்கு இரண்டு மற்றும் பெண் குழந்தைக்கு ஒரு ஆடு அறுத்து அஃகிஃகா செய்யவேண்டும். இதிலிருந்து ஏழைகள், திக்கற்றவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு விருந்தளிக்கலாம். இதன் மூலம் முஸ்லிம்களிடையே நட்பு, அன்பு மற்றும் சகோதரத்துவம் மேம்படுகின்றது. அத்துடன், குழந்தையின் மீதான தீங்கும் தவிர்க்கப்படுகின்றது. அஃகிஃகா செய்வதற்குமுன் தலைமுடியை மழிப்பது சுன்னத்தானதாகும்.

5 **க்ஹத்னா செய்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**الفِطْرَةُ خَمْسٌ، أَوْ خَمْسٌ مِنَ الفِطْرَةِ: الخِتَانُ، وَالِاسْتِحْدَادُ، وَنَتْفُ الإِبْطِ، وَتَقْلِيمُ الأَظْفَارِ، وَقَصُّ الشَّارِبِ (البخاري، مسلم)**

www.uzairfalahi.com

*பொருள்: இயல்பான விஷயங்கள் ஐந்து அல்லது ஐந்து விஷயங்கள் இயற்கையாகவே இயல்பான ஒன்றாகும், அவையாவன: க்ஹத்னா செய்தல், மர்ம உறுப்பின் மயிர் மழித்தல், நகங்களை வெட்டுதல், அக்குள் மயிர்களைக் களைதல் மற்றும் மீசை வெட்டுதல் (புக்ஹாரி, முஸ்லிம்)*

6 **உணவு மற்றும் தேவைகளுக்குச் செலவு செய்தல்** எதுவரை குழந்தைகள், ஆண்களோ பெண்களோ, தந்தையின் பாதுகாப்பில் இருப்பார்களோ அவர்களுக்கான உணவு மற்றும் அனைத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு தந்தையுடையதாகும். ஏனெனில், அவர்களுக்கு எவ்விதக் கேடும் நிகழ்ந்துவிடக்கூடாது மற்றும் அவர்கள் வழிதவறிவிடக்கூடாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**كَفَى بِالْمَرْءِ إِثْمًا أَنْ يُضَيِّعَ مَنْ يَقُوتُ (أبوداؤد)**

*பொருள்: ஒரு மனிதனைப் பாவம் செய்பவனாக ஆக்கிவிடுவதற்கு அவன் தன்னுடைய மற்றும் தன்னைச் சார்ந்தவர்களுடைய வாழ்வாதாரத்தை அழித்து வீணாக்கிவிடுவது மட்டுமே போதுமானது (அபூதாவூத்)*

7 **குழந்தைகளுக்கிடையில் நியாயமாக நடந்துகொள்ளுதல்** குழந்தைகளில் ஒருவர்மீது ஒருவருக்கு முன்னுரிமை அளிப்பது அவர்களிடையே வெறுப்பு, பொறாமை மற்றும் பகைமையுணர்வு ஆகிய ஒழுக்கக் கேடான பண்புகளை உருவாக்கும், இவை குடும்பத்தின் பரஸ்பர உறவுகளைப் பாழாக்கிவிடும்.

7 **குழந்தைகளுக்கு சீரான முறையில் கல்வி கற்பித்தல்** குழந்தைகளுக்கு சீரான முறையில் கல்வி மற்றும் பண்புகளைக் கற்பிப்பது பெற்றோர்களுடைய பொறுப்பாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِنَّ اللهَ سَائِلٌ كُلَّ رَاعٍ عَمَّا اسْتَرْعَاهُ، أَحَفِظَ ذَلِكَ أَمْ ضَيَّعَ (الترمذي)**

*பொருள்: அல்லாஹ் தஆலா ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் அவர்களுடைய பாதுகாப்பின்கிழ் இருந்தவற்றைப்பற்றி கேள்வி கேட்பான். அவன் அவற்றைப் பாதுகாத்துப் பராமரித்தானா அல்லது விணாக்கிவிட்டானா என்று (திர்மிதி)*

* * *

www.uzairfalahi.com